**மன்னார் பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 17 யூலை 2020 ஆந் திகதியும் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து மன்னார் பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட மூன்று வீதிகளின் பெறுமதி ரூபா 9,498,901 ஆக இருந்த போதும் இறுதி கணக்குகளில் ரூபா 6,161,704 ஆக காட்டபட்டமையால் சொத்துகளின் பெறுமதி ரூபா 3,337,197 ஆல் நிதிக்கூற்றுக்களில் குறைத்து காணப்பட்டிருந்தது. | குறித்த வித்தியாசம் எதிர்வரும் நிதியறிக்கையில் சீர்செய்யப்படும் என்பதனை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன் | நிதி முன்னேற்ற அறிக்கையும் இறுதி கணக்கு மீதிகளும் இணங்கி காணப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி நிதியில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,739,496 பெறுமதியான மூன்று கட்டிட அபிவிருத்தி வேலைகள் மூலதன செலவீனமாக கணக்கு வைக்கப்படாததுடன் தவறுதலாக நடைமுறை செலவீனமாக காட்டப்பட்டுள்ளது. இதனால் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றில் குறைத்து காட்டப்பட்டுள்ளது. | குறித்த கட்டடங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் தற்போதைய பெறுமதி கணக்கறிக்கையில் உள்ளடக்கப்படும் | மூலதன நிதியில் மேற்கொள்ளப்படும் வேலைகள் மூலதன செலவீனமான கருதப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 117,550 பெறுமதியான மின்னியல் உபகரணங்கள் மற்றும் 585 லீற்றர் எரிபொருளின் பெறுமதி நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் நிதியாண்டில் கவனத்தில் கொள்ளப்பட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் | வருட இறுதியில் இருப்புகளின் பெறுமதி சரியாக கணிக்கப்பட்டு நிதிகூற்றுக்கு கொண்டு வரப்பட்டல் வேண்டும். |
| (ஈ) | சபையினால் 2019 ஆம் ஆண்டில் ரூபா 698,100 பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 774,600 ஆக காணப்பட்டுள்ளதுடன் இவ்வேறுபாடு ரூபா 76,500 முன்னைய ஆண்டுகளில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரங்களின் பெறுமதியாகும். இவற்றுக்கான நாட்குறிப்பு பதிவின்றி நடப்பாண்டு நிதிக்கூற்று சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2020ம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும் | உரிய நாட்குறிப்பு பதிவுகள் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | சபையினால் 2018 ஆம் ஆண்டிற்கான பொருட்கணிப்பீட்டின் படி பதிவழிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 735,822 ஆக இருந்த போதும் மூலதன உதவுதொகை கணக்கில் ரூபா 764,150 கழிக்கப்பட்டுள்ளது. இதன் எதிர் பதிவாக மேலதிக வேறுபாடு ரூபா 28,328 மூலதன செலவுகளிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்ததுடன் திரண்ட நிதியினையும் அதிகரித்துக்காட்டப்பட்டுள்ளது. | 2020ம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படும் | கணக்கீட்டு வழுக்கள் தவிர்க்கப்பட வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டம் பிரிவு 16(2) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் நிதியாண்டில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | கணக்காய்விற்கு உரிய நேரத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571 | இரண்டு வருடங்களிற்கு மேலாக காணப்படும் ஏழு காலங் கடந்த வைப்புக்கள் ரூபா.257,692 தொடர்பில் நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை. | ஏழு வைப்புக்களை மீளளிப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது | நிதிப்பிரமாணத்திற்கு அமைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,724,717 ஆக இருந்ததுடன் அதற்கு நெரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,153,708 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாகசமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலங்கள் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் நிதி நிலமைக்கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் நிதி நிலமைக்கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| i. வீதவரியும் வரியும் | 3,350,111 | 304,205 | 434,640 | 738,824 | 526,000 | 239,355 | 163,082 | 808,659 |
| ii. வாடகைகள் | 10,610,900 | - | 9,603,416 | 2,809,977 | 9,595,600 | - | 7,952,916 | 2,830,000 |
| iii உத்தரவுச் சீட்டுக் கட்டணம் | 2,392,750 | - | 1,739,630 | - | 719,250 | - | 1,445,725 | - |
| iv சேவைக் கட்டணம் | 669,800 | - | 1,595,232 | 33,000 | 571,900 | - | 593,379 | - |
| v பற்றணை தண்டம் ஏனைய வருமானம் | 8,774,126 | - | 14,604,643 | 8,244,862 | 8,657,130 | - | 18,679,506 | 14,337,065 |
| | **25,797,687** | **304,205** | **27,977,561** | **17,975,723** | **19,468,960** | **239,355** | **28,834,608** | **17,975,724** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வீதவரியும் வரியும் ரூபா 3,350,111 ஆக இருந்த போதும் சேகரிக்கப்பட்ட வருமானமாக ரூபா 434,640 ஆக உள்ளமை மொத்த மதிப்பீட்டில் 8 சதவீதமாகும். இது வருமான சேகரிப்பின் வினைத்திறனின்மையினை வெளிப்படுத்துகின்றது. | 2020 இல் சரியான முறையில் பாதீடு தயாரிக்கப்படுவதுடன் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. | கிடைக்கக்கூடிய வருமானத்திற்கு பாதீடு தயாரிக்கப்படுவதுடன் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மன்னார் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான அறவிடப்பட வேண்டிய ஆதனவரி நிலுவை ரூபா.723,242 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அலுவலக உத்தியோகத்தர்களின் உதவியுடன் வீத வரி மற்றும் வரிகளை வசூலிக்க இவ்வருடம் உத்தேசித்துள்ளோம். மேலும் மீள் மதிப்பிட்டிற்கு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | உரிய காலங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு வீத வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.4 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான மாட்டிறைச்சிக்கடைகள், வாகன தரிப்பிட குத்தகை மற்றும் தின சந்தை என்பவற்றின் மூலம் நீண்ட காலமாக வருமதியான குத்தகை நிலுவை ரூபா.928,496 இனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடமுடியாத அறவீடுகளை நீதிமன்றத்திற்கு உட்படுத்துவதற்கு யூன் மாத சபைக்கூட்டத்தில் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இனிவரும் காலங்களில் நீதிமன்ற நடவடிக்கை மூலம் அறவிட உத்தேசித்துள்ளோம். | வருமான நிலுவைகளை அறவிட உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,011,035 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | 2020 ஆம் ஆண்டு கோரிப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதற்கமைய கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு தற்போது அறவிடப்பட்டுள்ளது | நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக்கொள்ள உரியநடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,852,177 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்படவேண்டியிருந்தன. | 2020 ஆம் ஆண்டு கோரிப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதற்கமைய கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு தற்போது நடவடிக்கை எடுக்கப்படும். | முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ள உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்கள் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2018/61 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் கடல், கடலோர மாசு கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்கள் எவையும் தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய திட்டங்களை அமுல்படுத்துவதுடன் பொதுமக்களுக்கும் அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் அனுமதி பெறப்படாமல் கடந்த காலங்களில் முடிவுறுத்தப்பட்டிருந்த 716 வீட்டு திட்டங்கள் தொடர்பில் சபைக்கு கிடைக்கவேண்டியிருந்த அனுமதி கட்டணம் மற்றும் குடிபுகு சான்றிதழ் வருமானம் ரூபா 1,116,960 பெறப்படாமையால் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது | பயனாளிகள் விபரங்கள் திரட்டப்பட்டதும் தனிப்பட்டமுறையில் கடிதங்கள் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | காலத்திற்கு காலம் உரிய அனுமதி பெறப்பட்டிருக்க சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த 6 முறைப்பாடுகள் தொடர்பில் சபையினால் 11 மாத காலத்திற்கு மேலாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது அவற்றை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் எம்மால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன | உரிய காலப்பகுதியினுள் முறைப்பாடுகள் யாவும் தீர்வு செய்யப்பட வேண்டும் |
| (இ) | சபைக்கு சொந்தமான வாகனங்களை வாடகைக்கு வழங்குதல் மூலம் நீண்ட காலமாக வருமதியான வாடகை நிலுவை ரூபா 593,724 வினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கையினை எடுக்கப்பட்டுவருகின்றது | நீண்ட காலமாக வருமதியான வாடகை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினது 14 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிராமையால் அத்தகையவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்கக்கூடிய வேலைகள் பாதிப்படைந்திருந்தன | பற்றாக்குறையாகவுள்ள ஆளணியில் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்படவுள்ளது. | உரிய காலங்களில் வெற்றிடங்கள் யாவும் நிரப்பப்பட்டு சிறந்த சேவையினை முன்னெடுப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

(ஆ) ஊழியர் பிணைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (i) PF/01/2017 இலக்க (அ) 04 மார்ச் 2017 ஆந் திகதிய மாகாண நிதிச் சுற்றுநிருபத்தின் பந்தி 06 இன்படி பிணைப்பணம் செலுத்திய அலுவலர் பிறிதொரு அமைச்சிற்கு அல்லது திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்படும் போது அது பற்றிய முழு விபரங்களும் ஆவணங்களும் உரிய அமைச்சிற்கு அல்லது திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். எனினும் பிரதேச சபையிலிருந்து பல்வேறு காரணங்களுக்காகவும் விலகிய ஐந்து அலுவலர்களின் ரூபா 14,000 பெறுமதியான பிணை வைப்பு விபரங்கள் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | குறித்த உத்தியோகத்தர்களின் பிணைப்பணம் தொடர்பாக ஆவணங்கள் உரிய திணைக்களங்களுக்கு விரைவில் அனுப்பப்படும் | பிணைப்பணம் செலுத்திய அலுவலர் விபரம் உரிய அமைச்சிற்கு அல்லது திணைக்களத்துக்கு உரிய காலப்பகுதிக்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும் |
| (ii) PF/01/2017 இலக்க (அ) 04 மார்ச் 2017 ஆந் திகதிய மாகாண நிதிச் சுற்று நிருபத்தின்படி பிணைப்பணம் செலுத்தப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த ஊழியர் பிணைத் தொகை ரூபா 147,500 செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 72,500 குறைவாக செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது | எஞ்சிய தொகையினை சம்பளத்திலிருந்து அறவீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | குறைவாக அறவிடப்பட்ட தொகையினை குறித்த அலுவலர்களிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1987 ஆண்டு 15 ம் இலக்க பிரதேச சபைகள் கட்டளை சட்டத்தின் 52 ஆம் பிரிவிற்கு முரணாக, கடந்த 5 வருடங்களில் 105 கட்டடங்களுக்கான அனுமதி மறுக்கப்பட்ட போதிலும் அவற்றில் 70 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருந்தன. எனினும் இவ் விடயம் தொடர்பில் சபையினால் மேலதிக நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதி வழங்கப்படாத கட்டிடங்களுக்கு ஆவணங்கள் பூரணப்படுத்தப்படும் நிலையில் அனுமதி வழங்குவதற்கும், அனுமதி பெறப்படாமல் கட்டிமுடிக்கப்பட்ட கட்டிட உரிமையாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தல் வழங்குவதோடு அதன் பின்னரும் அனுமதி பெறதவறும் பட்சத்தில் இணக்க சபையினூடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | பிரதேச சபைகள் கட்டளை சட்டத்தின் 52 ஆம் பிரிவிற்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3.5 சொத்து முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இச் சபைக்கு சொந்தமான பயன்பாட்டிலுள்ள 15 காணிகள் பத்து வருடங்களுக்கு மேலாக பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்கு கொண்டுவரப்படாமையினால் ஐந்தொகையில் சொத்துகளின் பெறுமதி குறைத்து காட்டப்பட்டுள்ளது | அளவீடு செய்யப்பட்டு ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதும் விலை மதிக்கப்பட்டு திணைக்களத்தினூர்டாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் சேர்க்கப்படும;; | காணிகள் மதிப்பிடப்பட்டு சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்படல் வேண்டும். |

### 3.5.2 வாகன பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் சபையில் காணப்பட்ட ரூபா 10,119,000 பெறுமதியான 13 வாகனங்கள் 01 தொடக்கம் 05 வருட காலப்பகுதிக்கு மேலாக திருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பயன்படுத்தக்கூடிய வாகனங்களை திருத்தி பாவனைக்கு உட்படுத்தப்படும் அதே வேளை திருத்தம் செய்து பாவிப்பதில் சிக்கன மற்ற தன்மை காணப்படும் வாகனங்களிற்கு பொருத்தமான மாற்று நடவடிக்கைகள் எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உரிய காலங்களில் வாகனங்கள் திருத்தப்பட்டு பாவனையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 3.5.3 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானத்தை பெற தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இச்சபைக்கு சொந்தமான ZA 3165 இலக்க JCB வாகனமானது திருத்த வேலைகளின் நிமித்தம் ஒரு வருடத்திற்கு மேலாக பாவனையற்று காணப்பட்டதனால் சராசரியாக ரூபா.1,500,000 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | தற்போது இயந்திரம் முழுமையாக திருத்தப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளது. | உரிய காலங்களில் வாகனங்கள் திருத்தப்பட்டு பாவனையில் ஈடுபடுத்தி வருமானத்தினை பெற நடவடிக்கை எடுக்கபடல் வேண்டும். |

### 3.5.4 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டில் காணப்படுகின்ற ரூபா 4,090,000 பெறுமதியான 10 வாகனங்களின் உரிமை மாற்றம் செய்யப்படாமல் உள்ளதுடன் இது தொடர்பான தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது தொடர்சியாக உரிமைமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிமைமாற்றம் செய்யப்படாத வாகனங்களை உரிய காலங்களில் உரிமைமாற்றம செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2 இன் பிரகாரம், சபையினால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்கான பெறுகைத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் | பெறுகை வழிகாட்டிற்கமைய வருடாந்த பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாதீட்டின் படி பயணச்செலவுகள் மற்றும் மானியங்கள் தொடர்பில் பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையான வேறுபாடுகளின் வீச்சானது 07 சதவீதத்திற்கும் 56 சதவீதத்திற்கும் இடையிலானதாக காணப்படுகின்றடையானது வினைத்திறனற்ற பாதீட்டு தயாரிப்பினை எடுத்துக் காட்டுகின்றது. | எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாமல் வினைத்திறனாக பாதீடு தயாரிக்கப்படும் | செலவினக் கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்குப் பரிசோதனைகளால் எவ்வித முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை. | தனியாக உள்ளகக் கணக்கு உத்தியோகத்தருக்கு உள்ளகக் கணக்காய்வுக்கு மட்டும் வகைப்பட்டு வினைத்திறனாக செயற்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | உள்ளகக்கணக்காய்வின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |